**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**P102 உரைநடையும் நாடகமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. உரைநடை கலந்த செய்யுட்களால் எழுதப்பெற்ற நூல்கள் யாவை?
2. அடியார்க்கு நல்லார் உரை எழுதிய நூல்கள் யாவை?
3. உரைநடை வேந்தர் என்றழைக்கப்படுபவர் யார்?
4. தற்காலத் தமிழ் உரைநடையில் ஞாயிறும் திங்களுமாகத் திகழ்பவர்கள் யாவர்?
5. திரு.வி.க. நடத்திய இதழ்கள் யாவை?
6. அறிஞர் அண்ணாவின் இரு நாடகங்களின் பெயரினை எழுதுக.
7. நாடக இலக்கணம் குறித்து நூல் எழுதியவர் யார்?
8. பாரதியார் தம் கவிதையிலும் உரைநடையிலும் பயன்படுத்திய அருஞ்சொற்கள் யாவை?
9. இரா.பி. சேதுப்பிள்ளைக்கு சொல்லின்செல்வர் பட்டம் யாரால் கொடுக்கப்பட்டது?
10. அசாம் மாநிலத்தில் வழங்கும் இசை நடனத்தின் பெயர் யாது?
11. பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் எழுதிய நாடகத்தின் பெயரினைக் கூறுக.
12. இசைப்பாட்டு வடிவத்தில் உள்ள தமிழ் நாடகத்தின் பெயரினைச் சுட்டுக.
13. தொலைக்காட்சி நாடகங்களாக ஆக்கப்பட்ட இரண்டு புதினங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

14. தொடர் நாடகத்தை எதனுடன் ஒப்பிடலாம்?
15. திரௌபதி வஸ்திராபகரணம் கூத்தில் துகிலுரியும் கட்டத்தில் என்ன செய்கிறார்கள்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. நச்சினார்க்கினியரின் உரைச்சிறப்பை எழுதுக.
2. நாயக்கர் காலத்தில் உரை எழுதியவர்கள் பற்றிக் குறிப்பிடுக.
3. உரைநடை எழுதுவோரின் பொறுப்பு யாது?
4. தமிழ் உரைநடைக்கு மு.வ.வின் பங்களிப்பைப் புலப்படுத்துக.
5. உரைநடை எழுதுவோரின் பொறுப்பு யாது?
6. நாடகத்துக்கும் கூத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?
7. பம்மல் சம்பந்த முதலியார் நாடகக்கதைகளில் செய்த புதுமைகளை விளக்கியுரைக்க.
8. தொலைக்காட்சி நாடகங்களின் வகைகள் பற்றி எடுத்துரைக்க.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் உரைநடை வளர்ச்சியில் அண்ணாவின் பங்களிப்பை விவரிக்க.

2. (அ) உரைநடை ஆசிரியர்களுள் பாவாணரின் தமிழ்த்தொண்டை ஒப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாடக வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

3. (அ) தமிழ் நாடக வளர்ச்சியில் சங்கரதாஸ் சுவாமிகளின் செயல்பாட்டைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சமூகச் சீர்த்திருத்த நாடகங்கள் பற்றி விரித்துரைக்க.

* * *